


# பாஸ்டர் ரசல்

அவரது வாரிசு ஜெ. எஃப். ரூதர்ஃபோர்டு என்பவரால்
எழுதப்பட்ட சுருக்கமான வாழ்க்கை வரலாறு

Published : April 2019

PDF format available : www.dawnbiblestudents.com

Contact :

J. Jayaprasad
F-01, Divya Panchami -2,
4th Main, Thayappa Garden,
Bilekahalli, Bangalore - 560076.
Mob: +91 - 95350 96517

A Bible Students Publication

# மறைந்த பாஸ்டர் ரசல்

அவரது வாரிசு ஜெ. எஃப். ரூதர்ஃபோர்டு என்பவரால்
எழுதப்பட்ட சுருக்கமான வாழ்க்கை வரலாறு

> பாஸ்டர் ரசல் அவர்களின் பத்திரிக்கைகள் அந்நாட்களில் வாழ்ந்த மிகபெரிய எழுத்தாளர்க - ளின் பத்திரிக்கைகளை காட்டிலும் மிக அதிக அளவில் எல்லா வாரமும் தவறாமல் வெளிவந்து கொண்டிருந்தது. வட அமெரிகாவில் வாழ்ந்த மிகபெரிய பிரசங்கியார்களை காட்டிலும், ஆர்தர் பிரிஸ்பேன் (Arthur Brisbane), நார்மன் ஹாப்குட் (Norman Hapgood) ஜார்ஜ் ஹோரேஸ் லோரிமர் (George Horace Lorimer,) டாக்டர். ஃபிராங்க் கிரேன் (Dr. Frank Crane), ஃப்ரெட்ரிக் ஹஸ்கின்ஸ் (Fredrick Haskins) இதுபோன்ற அநேக சிறந்த ஆசிரியர்களை காட்டிலும் பாஸ்டர் ரசல் அவர்களின் எழுத்துக்கள் மிக அதிக அளவில் வலம் வந்தன. - *தி கான்டினென்ட்*

உலகத்திலுள்ள அனைவராலும் ஒரு விரிவுரையாளராகவும், சுவிசேஷத்தின் ஊழியராகவும், மிகபெரிய எழுத்தாளராகவும், போதகராகவும் அறியப்பட்ட பாஸ்டர் டேஸ் ரசல் அவர்கள் பிட்ஸ்பர்க் என்ற இடத்தில் பிப்ரவரி 16.ம் தேதி 1852 ல் பிறந்து அக்டோபர் 31-1916 ஆம் ஆண்டு மகிமைக்குள் எடுத்து-கொள்ளப்பட்டார். இவர் ஸ்காட்ச்-ஐரிஷ் வம்சத்தை சேர்ந்த ஜோசப் எல் மற்றும் எலிசா பிர்னி ரசல் அவர்களின் மகனானவர். 1879 ஆம் ஆண்டு மரியா பிரன்சஸ் ஆக்லே என்பவரை திருமணம் செய்துகொண்டார். ஆனால் புத்திர பாக்கியம் கிடைக்க பெறவில்லை.

18 ஆண்டுகளுக்கு பிறகு அவர் நடத்தி-கொண்டு வந்த பத்திரிக்கை நிறுவனத்தில் ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டு அதன் காரணமாக பிரிவினை உண்டானது. பாஸ்டர் ரசல் அவர்கள் கீழ்கண்ட புத்தகங்களுக்கு ஆசிரியராக விளங்கினார்.

கர்த்தரின் இரண்டாம் வருகையின் பொருளும் விவரமும்; வளரும் கிறிஸ்தவர்-களுக்கான ஆகாரம், ஆசரிப்பு கூடார நிழல்கள், யுகங்களை பற்றிய தெய்வீக திட்டம், காலம் சமீபமாயிருக்கிறது, உம்முடைய இராஜ்யம் வருவதாக, அர்மகெதோன் யுத்தம், தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே ஒப்புரவாகுதல், புது சிருஷ்டி, நரகம் பற்றி வேதாகமம் சொல்லும் கருத்து, ஆவிக்குரிய காரியங்களை பற்றி வேதாகமம் சொல்லும் கருத்துக்கள், பழைய வேதாகம நிருபங்கள் சிருஷ்டிப்புகளின் புகைப்பட தொகுப்பு.

கிறிஸ்தவ பெற்றோர்களின் கண்கா - ணிப்பில் வளர்க்கப்பட்ட பாஸ்டர் ரசல் அவர்கள் இளம் வயதிலேயே வேதாகம காரியங்களில் அதிக நாட்டம்கொண்டு அவருடைய சபையில் இணைந்து அங்குள்ள ஊழிய காரியங்களில் தன்னை ஈடுபடுத்தி கொண்டார். அவருடைய போதகர்கள் பழைய உபதேசமான நரகம், அக்கினி போன்ற தவறான (அ) முரண்பாடான உபதேசங்களை

தாங்கள் விசுவாசித்தும் அதை கற்றும் கொடுத்தார்கள். 15 வயது இளைஞனாய் இருக்கும்போதே மிகவும் வைராக்கியமாய் வேதத்தை அதிகமாய் விசுவாசித்து மற்றவர்களையும் அதற்குள் கொண்டுவர கூடிய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார்.

அவருடைய 17 ஆம் வயதிலே மிகவும் மத நம்பிகையுடையவராக காணப்பட்டார். அவருடைய மதபோதகர்கள் அக்கினி, கந்தகம், எரிகிற கடலை பற்றினதான உபதேசங்களை அவர்கள் சரியாக எடுத்துக் கூற இயலாமையே இதற்கு காரணமாக அமைந்தது. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தவிர மற்ற அனைவரும் எரிநரகத்தில் தள்ளுண்டு நித்தியமாக வாதிக்கப்படுவார்கள் என்ற உபதேசம் அவருக்கு மிகவும் வெறுப்புணர்வை தூண்டியது. தன்னுடைய வல்லமையை பயன்படுத்தி மனிதனை சிருஷ்டித்த ஒரு கடவுள் உலகம் உண்டாவதற்கு முன்னதாக அவர்களை தெரிந்துகொண்டு அவர்களுடைய வாழ்க்கையை தீர்மானித்த தேவன் அவர்களை நித்திய வாதைக்குள் வைப்பாரென்றால் அவர் ஞானமுள்ளவராகவோ, அன்புள்ளவராகவோ இருக்க முடியாது. அவருடைய நிலைமை மனிதனுடைய நிலைமையை காட்டிலும் கீழானதாகவே இருக்ககூடும் என எண்ணினார். எப்படியாயினும் தேவன் ஒருவர் உண்டென்று அறிந்து விசுவாசித்திருந்தார்.

ஆனாலும் பரவலாக புரிந்துகொள்ளப்பட்ட உபதேசமான "தேவன் தன்னையே மனிதனுக்கு வெளிப்படுத்தினார்" என்ற உபதேசத்தை ஏற்று கொள்ள மறுத்தார்.

அதை தொடர்ந்து வருகிற வருடங்களில் அவர் ஒரு வணிக குடும்பத்தில் வளர்ந்து கொண்டிருந்தாலும் தன்னுடைய அதிகமான நேரத்தை மதங்களை பற்றினதான ஆராய்ச்சியில் செலவிட்டார். புத்த மதம் மற்றும் அதை சார்ந்த மற்ற மதங்களின் தகுதியற்ற, நம்பத்தகாத விசுவாசத்தை ஆராய தொடங்கினார். ஆனால் உண்மையான சுவிசேஷம் எது? என்பதான உயிருள்ள கேள்விக்குறி அவருடைய மனதுக்குள் இருந்து கொண்டிருந்தது. அவருக்கான புகழும், அதிஷ்டமும் ஏராளமாய் இருந்தபோதிலும் வேத ஆராய்ச்சியில் ஈடுபட தீர்மானித்தார். அதாவது வரப்போகிற நியாயதீர்ப்பை குறித்ததான கேள்விகளுக்கு பரிசுத்த வேதாகமமே பதில் உரைக்கட்டும் என்று எண்ணினார். இதுவே அவருடைய புதிய நோக்கத்தின் ஆரம்பமாக அமைந்தது.

# போதகர் ரசல் அவர்களின் போதனைகள்

கனத்திற்குரிய மனதை இயற்கையிலே கொண்ட பாஸ்டர் ரசல் அவர்கள் உண்மையான தேவனை ஆராதிப்பதிலும், அவரை தொழுதுகொள்வதிலும் அதிக வாஞ்சை கொண்ட அவர் ஒரு காரியத்தை தெளிவுப்படுத்த விரும்பினார். அதாவது, கிறிஸ்தவ மண்டலத்தில் உள்ள ஒவ்வொருவரின் நம்பிக்கை மற்றும் விசுவாசம் பரிசுத்த வேதாகமத்தை அடிப்படையாக கொண்டபோதிலும், ஒன்றுக்கொன்று பிரிவினையே காணப்படுகிறது. ஒருவேளை வேதாகமத்தில் ஏதேனும் தவறு இருக்க வாய்ப்புள்ளதா? இல்லையென்றால் மிகவும் கடினமான உபதேசமாகிய நித்திய வாதிப்பை பற்றி போதித்திருக்க வாய்ப்பில்லை. எனவே பரிசுத்த வேதாகமதிற்கு நேராய் தன்னை திருப்பினவராய், மனிதனுடைய விசுவாசம் மற்றும் நம்பிக்கையை ஒருபுறம் தள்ளிவிட்டு, வேதாகமத்திலுள்ள ஆழமான சத்தியங்களை கவனமாக ஆராய தீர்மானம் செய்தார். அதன் பலனாக அவருடைய விசுவாசம் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தின் மேல் உறுதியாய் நிலைநிறுத்தப்பட்டது. மீதமுள்ள வாழ்க்கையை வேதாகமத்தை கற்பிக்கவும், வேதாகமத்தை சார்ந்த புத்தகங்களையும், கைபிரதிகளையும் எழுதி வெளியிடவும்,

மேசியாவினுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். அப்போஸ்தல - னாகிய பவுல் காலத்திற்கு பிறகு, பாஸ்டர் ரஸல் அவர்கள் ஒரு மிகப்பெரிய மத போதகராக விளங்கினார். மேலும் தற்காலத்தில் காணப்படும் எல்லா நவீன மனிதர்களை காட்டிலும் மிக அதிகமான காரியங்களை செய்து, ஜனங்களுடைய விசுவாசத்தை வேதத்தின் பேரில் நிலைநிற்கும்படி செய்தார். சத்தியத்தை வாஞ்சித்து தேடுகிற கத்தோலிக்-கர்கள், புராடெஸ்டன்ட், யூதர்கள் மற்றும் சுய சிந்தனையாளர்கள் போன்ற அனைவருக்கும் சத்தியத்தை எடுத்துரைப்பதே அவருடைய பிரதான நோக்கமாயிருந்தது. அவர் எவ்வித அமைப்புகளோடும் இணையாமல் தனியாகவே செயல்ப்பட்டார்.

பாஸ்டர் ரசல் எவ்விதமான புதிய மதத்தை தோற்றுவிக்கவோ அல்லது அப்படி கூறினதாகவோ கிடையாது. மாறாக இயேசு கிறிஸ்துவினாலும், அப்போஸ்தலர்களாலும் முன்மொழியப்பட்ட மகத்தான சத்தியத்தை மறுமலர்ச்சி அடைய செய்து, 20 ஆம் நூற்றாண்டின் ஒளியை இச்சத்தியத்தின் மேல் வெளிப்பட செய்தார். தேவனிடத்திலிருந்து ஒரு தனிப்பட்ட வெளிப்பாட்டை பெற்றுக் - கொண்டதாகக் கூறாமல், மாறாக தீர்க்கதரிசனங்களில் ஊடாக வேதத்திலுள்ள

இரகசியங்களை புரிந்துகொள்ள தேவன் ஏற்பாடு செய்த காலமிது மற்றும் யாரெல்லாம் அர்பணிப்பின் ஜீவியத்திலும் அவருடைய சேவையிலும் முழுமையாக ஈடுபட்டுள்ளார்-களோ, அவர்கள் இதை புரிந்துகொள்ள தகுதியானவர்களாய் காணப்பட்டார்கள். "பரிசுத்த ஆவியின் கனிகளும், கிருபைகளும் அவருக்குள் வளர்ந்து பெருக முழுமையாக தன்னை ஒப்புக்கொடுத்தார். இப்படியாக, தேவனுடைய வாக்குத்தத்தம் அவருக்குள் நிறைவேறினது." 2 பேதுரு 1: 5-8.

அவர் போதித்த அனைத்தும், வசன அதிகாரத்தின் மேற்கோள்களைக் கொண்டு நிரூபித்தார்.

- மனிதன் ஒரு அழிவுள்ள ஆத்துமா.

- மனிதன் அழிவில்லாத ஆத்துமா இல்லை.

- பாவத்தின் சம்பளம் மரணம் - நித்திய காலமான வாதை கிடையாது.

- மரணம் என்பது ஒரு மனிதனுக்கு தேவனுடைய கட்டளையை மீறினதின் விளைவாகவும், அதற்கான தண்டனையாகவே ஏற்படுகிறது.

மரணம் என்பது அதிலிருந்து விடுதலை பெற இயலாத மனிதர்களின் அழிவை குறிக்கிறது.

• தேவனுடைய மகாபெரிய உன்னதமான கிருபையினால், தமது குமாரனின் ஈடுபலியின் மூலமாக, பாவம் மற்றும் மரணத்தின் பிடியிலிருந்து மனுக்குலத்தை விடுவித்தார்.

• தேவனுடைய ஒரே பேரான குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மாம்சமாகி, ஒரு மனிதனுடைய நிலையை அடைந்து, மனுக் - குலத்திற்காக மரித்து, தெய்வீக சுபாவத்தை-யுடையவராய் ஆவியிலே உயிர்பிக்கப்பட்டார்.

• இயேசு கிறிஸ்துவினுடைய மரணத்தினாலும், உயிர்த்தெழுதலினாலும் மனிதனுடைய விடுதலைக்காகவும், மீட்புக்காகவும் ஈடுபலியை வழங்கினார். அவர் தேவனுடைய கிருபையினால் எல்லா மனுக்குலத்திற்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்.

• எனவே, தேவனுடைய திட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட காலம்வரைக்கும் இந்த முழு மனுக்குலமும் தங்களுக்கு நேரிடும் எல்லா பாடுகளையும் கடந்துபோக வேண்டியது மிக அவசியமானது. இதன் முடிவிலே மனுக்குலம் மரணத்தை விட்டு உயிர்த்தெழுப்பப்-படுவார்கள்.

• இயேசு கிறிஸ்து பரலோகம் சென்று மீண்டும் இரண்டாம் வருகையில் வெளிப்படுவது அவசியமானது.

• அவர் பரலோகம் சென்று, இரண்டாம் வருகையில் வெளிப்படுவதற்கு இடையேயுள்ள காலப்பகுதி சபை அங்கத்தினர்களை தேர்ந்தெடுப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ளது.

• அந்த மகிமையான கனத்திற்கு பாத்திரவான்களாய் காணப்படக் கூடிய அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும், கிறிஸ்துவினுடைய சிந்தப்பட்ட இரத்தத்தின் மேலும், அவர் கொடுத்த ஈடுபலியின் மேலும் விசுவாசமுள்ளவர்களாய் தேவனுடைய சித்தத்தை செய்ய முழுவதும் அர்பணித்தவர்களாய் விசுவாசத்தில் உறுதியாய் நின்று தேவனுடைய சித்தத்திற்கு மரணம் வரையிலும் கீழ்ப்படிந்தவர்களாய் காணப்படவேண்டும்.

• மேலும் யார் முழுவதுமாய் தன்னை அர்பணித்து பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலை அடைந்து, ஜெயங்கொள்ளுகிறவர்களாய் முதலாம் உயிர்த்தெழுதலை அடைந்து பரலோக இராஜ்யத்தின் மிகவும் கனத்திற்குரிய நிலையில், கிறிஸ்துவுடனே ஆயிர வருட அரசாட்சியிலே இப்பூமியின் குடிகளை ஆசீர்வதிக்ககூடிய கருவிகளாய் மாறுவார்கள்.

• ஆயிர வருட அரசாட்சியின் காலத்தில் மரித்த எல்லாரும் உயிரடைந்து ஒரு மனிதனாய் தங்களுடைய வாழ்க்கை அல்லது மரணத்திற்க்கான நியாயமான மற்றும் பாரபட்சமற்ற நியாயதீர்ப்பை பெற்றுகொள்-வார்கள்.

• இந்த யுகத்தின் முடிவிலே மனப்பூர்வமாய் கீழ்ப்படியாதவர்கள் நித்தியமாய் அழிக்கபட்டு, கிறிஸ்துவினுடைய நீதியுள்ள ஆட்சிக்கு தங்களுடைய இருதயத்தை முழுவதுமாய் கீழ்ப்படுத்துகிறவர்கள் சரீரத்திலும், மனதிலும், குணாதிசயங்களிலும் பரிபூரணத்தை அடைவார்கள்.

• இந்த ஆயிர வருட அரசாட்சியிலே இந்த முழு பூமியானது பழைய ஏதேனுடைய நிலமையை அடைந்து, பரிபூரணமுள்ள மனிதர்கள் வாழ தகுதியுள்ளதாய் மாற்றப்படும்.

• பரிபூரண நிலமையை அடைந்த மனிதர்கள் மாத்திரமே வரப்போகின்ற எல்லா யுகத்திலும் இந்த பூமியை சுதந்தரித்துகொள்வார்கள்.

# பாஸ்டர் ரசலுடைய ஊழிய பணிகள்

தேவன் இவ்வுலகத்தின் ஜனங்களை ஆசீர்வதிக்கப்போகின்ற அருமையான திட்டத்தை பாஸ்டர் ரசல் அவர்கள் கண்டு மிகவியந்து, இந்த உண்மையை இவ்வுலக ஜனங்களுக்கு வெளிப்படுத்த தன்னுடைய முழு ஆற்றலனைத்தையும் செலவழிக்க ஆரம்பித்த-தால் அவர் ஒருபோதும் விடுப்பு எடுத்ததில்லை. தன் மரணநாள் வரையிலும் ஒய்வின்றி செயல்பட்டார்.

மற்ற கிறிஸ்தவர்களை போலவே இவரும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கி இருந்தார். 1872 ஆம் ஆண்டிலிருந்து 1876 ஆம் ஆண்டின் மத்தியிலே கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகை மாம்ச சரீரத்தில் அல்லாமல், ஆவிக்குரிய சரீரத்தில் மனுஷருடைய கண்களுக்கு புலப்படாவண்ணம் அவருடைய இரண்டாம் பிரசன்னமாகுதல் 1874 ஆம் ஆண்டு குளிர்காலத்தில் நிகழும் என்பதையும் வேதாகமம் தெளிவாக போதிக்கிறது என்று கண்டுபிடித்த அவர், இதை "தி ஆப்ஜெக்ட் அண்ட் மேனர் ஆஃப் அவர் லார்ட்ஸ் ரிட்டர்ன்" என்ற புத்தகத்தில் வெளியிட்டார். அது அதிக அளவில் விற்பனையானது.

அமெரிக்கா மற்றும் கனடாவில் இருந்து அநேக வேதமாணவர்கள் அந்த குறிப்பிட்ட புத்தகத்திலிருந்த அநேக விஷயங்களைக் குறித்து கேள்விகள் எழுப்பினார்கள். இதனால் பாஸ்டர் ரசல் அவர்களின் கடித போக்குவரத்துகள் மிகுதியானது. இந்த உண்மை சத்தியத்தை பற்றி ஆராய்ச்சி செய்பவர்களின் மனவிருப்பங்களின் அவசியத்தை கருத்தில் கொண்டு 1879 ஆம் ஆண்டு முதல் "தி வாட்ச் டவர் அண்ட் ஹெரால்டு ஆஃப் கிறைஸ்ட்ஸ் ப்ரெசென்ஸ்" என்ற பத்திரிக்கையை வெளியிடத்-தொடங்கினார். தன்னுடைய மரணம் வரையிலும் அதன் முக்கிய ஆசிரியராகவும் விளங்கினார். அந்த பத்திரிக்கை 15 நாளுக்கு ஒருமுறை வெளிவந்து கொண்டிருந்தது. அதில் எந்த ஒரு விளம்பரங்களும் இடம் பெறவில்லை. முழுவதும் வேதத்தைப் பற்றியதான காரியங்களை வெளிப்படுத்தவே அர்ப்பணிக்கப்பட்டது. ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்ட அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மக்கள் மத்தியில் மாதத்திற்கு இருமுறை 45,000 பிரதிகள் வெளியாயின. அதுபோலவே ஜெர்மன், பிரான்ஸ், ஸ்வீடிஷ், ட்யானோ-நார்வேஜியன் மற்றும் போலிஷ் போன்ற நாடுகளிலுள்ள மக்கள் மத்தியிலும் மற்றும் அமெரிக்கா ஐரோப்பியர்களின் மத்தியிலும் இந்த பத்திரிக்கை சென்றடைந்தது.

# மிகச்சிறியதான
# பிட்ஸ்பர்க் தலைமையகம்

1884 ஆம் ஆண்டில் பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள அலேகெனி என்னும் இடத்தில் (அதாவது இப்பொழுது இருக்கிற பிட்ஸ்பர்க்) "வாட்ச் டவர் பைபிள் அண்ட் ட்ராக்ட் சொசைட்டி" என்ற நிறுவனம் ஏற்படுத்தப்பட்டு அரசாங்கத்தில் பதிவு செய்யபட்டு, இந்நிறுவனத்தின் தலைமை செயலாளராக மரணம் வரையில் செயல்பட்டு வந்தார். 1909 ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா அதனை சுற்றியுள்ள இடங்களுக்கு இதன் அவசியம் அதிக அளவில் தேவைப்பட்டதினால் மிக வளர்ச்சி பெற்று தலைமையகம் நியூயார்க் மாநிலத்தில் உள்ள புரூக்ளின் என்னும் பட்டணத்திற்கு மாற்றப்பட்டது.

# ஹென்ரி வார்டு பீச்சர் - ன்
# வீடு வாங்கப்படுதல்

புரூக்ளின் என்னும் பட்டணத்தில் உள்ள கொலம்பியா ஹைட்ஸ் என்ற இடத்திலே, எண். 124-ல் ஹென்ரி வார்டு பீச்சர்ஸ் மேன்ஷன் என்ற பேருள்ள பங்களா ஆச்சரியப்படும் விதமாக நிறுவனத்தின் வசம் வந்தது. இந்த பங்களா உலகப் புகழ்பெற்ற சொற்பொழிவாளரின் ஆராய்ச்சிக்கூடமாகவும், வசிக்கும் ஸ்தல-மாகவும் அவர் மரணம் வரைக்கும் இருந்தது.

இந்த ஆராய்ச்சி சமயத்தில் அமெரிக்கா அதிபரான லிங்கன் தம்முடைய ஸ்தானத்திற்கு விரோதமாக கிளர்ச்சி செய்த காலத்தில் பிளைமௌத் சபையின் ஊழியர்களோடு நடுராத்திரியில் இரகசியமாய் அவரை சந்தித்து, அவர்கள் கைகொள்ளவேண்டிய ஐரோப்பிய தேசங்களின் உபதேச பிரயாணத்தில் அமெரிக்க ஐக்கியத்தை பற்றி உள்ள பிரிட்டிஷாரின் யோசனைகளை மாற்றும்படி அவர்களை (அமெரிக்க) ஐக்கியத்திற்கு சாதகமாக மனோபாவத்தை மாற்றும்படியாக அவர்களை கேட்டுகொள்ள முடிந்தது.

## பாஸ்டர் ரசல் அவர்களின் விரிவான பரப்புரை

பாஸ்டர் ரசல் அவர்கள் "வாட்ச் டவர் பைபிள் அண்ட் ட்ராக்ட் சொசைட்டி" என்ற தலைமை நிறுவனத்தின் பொது செயலாளராக மட்டுமில்லாமல், "பீபல்ஸ் புல்பிட் அசோசியேஷன்" என்ற நிறுவனத்தின் தலைமை பொறுப்பிலும் இருந்தார். அது 1909 ல் நியூயார்க் ஸ்டேட் கார்ப்போரேஷன் மூலம் நிறுவப்பட்டது, மற்றும் "சர்வதேச வேத மாணவர்கள் ஐக்கியம்" இன்டர்நேஷனல் பைபிள் ஸ்டுடென்ட்ஸ் அஸோசியேஷன்" கிரேட் பிரிட்டனில் உள்ள லண்டனில் 1913 ல் தொடங்கபட்டது. இவ்வாறு உருவான

நிறுவனங்கள் தலைமை கழகத்தின் கிளையாக வெவ்வேறு இடங்களில் அனைத்து சட்ட விதிகளுக்குட்பட்டு செயல்பட்டது. இந்த மத ரீதியான நிறுவனங்களாலும், அவருடைய சொற்பொழிவாலும், மற்றும் போதனைகளின் மூலமாகவும் மேசியாவினுடைய இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவித்தார்.

கீழ்கண்ட புத்தக வெளியீடுகள் 1881 - 1914 வரையில் அவரால் எழுதப்பட்டு, ஒவ்வொன்றும் பிரமாண்டமான அளவில் மக்களை சென்றடைந்தது. அவையாவன,

| | | |
|---|---|---|
| ஃபுட் ஃபார் திங்க்கிங் கிறிஸ்டியன் **Food for Thinking Christians** | : | 14,50,000 |
| டேபர்னேக்கள் ஷேடோஸ் **Tabernacle Shadows** | : | 10,00,000 |
| டிவைன் பிளான் ஆஃப் தி ஏஜஸ் **Divine Plan of the Ages** | : | 48,17,000 |
| தி டைம் ஈஸ் அட் ஹேண்ட் **The Time is at Hand** | : | 16,57,000 |
| தை கிங்டம் கம் **Thy Kingdom Come** | : | 15,78,000 |
| பேட்டல் ஆஃப் அர்மெகெதோன் **Battle of Armageddon** | : | 4,72,000 |
| தி அட்டோன்மென்ட் **The Atonement** | : | 4,45,000 |
| நியூ கிரியேஷன் **The New Creation** | : | 4,23,000 |
| வாட் சே த ஸ்கிரிப்ட்சர் சே அபௌட் ஹெல் **What say the Scripture about Hell** | : | 30,00,000 |

பாஸ்டர் ரசல் அவர்கள் "ஃபோட்டோ டிராமா ஆஃப் கிரியேஷன்" எழுத்தாளராக இருந்து அவருடைய மரணத்திற்கு முன்பு ஏறக்குறைய 12 மிலியன் மக்களுக்கு காட்சியாக வெளியிடப்பட்டது. அவரால் எழுதி வெளியிடப் பட்ட இந்த ஃபோட்டோ டிராமா காட்சி மிக வெகுவாக மக்களை சென்றடைந்தது. அவருடைய புத்தக வெளியீடுகள் 35 வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதே சமயம் உலகமெங்கிலும் இருந்த 1200 வேத மாணவர்களின் சபைக்கு போதகராகவும் இருந்தார். இவற்றில் சில இடங்களுக்கு சமயம் கிடைக்கும்போதெல்லாம் நேரில் சென்று சந்தித்து ஊழியம் செய்தார். மற்றவர்களுக்கு "தி வாட்ச் டவர்" மூலமாகவும், தனிப்பட்ட முறையிலும் ஊழியம் செய்தார்.

அவர் விரிவுரையாளர் பணியகம் ஒன்றை ஏற்படுத்தி, தொடர்ந்து அநேகர்களை பணியில் அமர்த்தினார். அவர்கள் பல்வேறு இடங்களுக்கு பிரயாணம் செய்து வேதத்தின் மகத்துவங்களை அங்குள்ள வேதமாணவர்களுக்கு அறிவுரை-களை வழங்கினார். மேலும் துணை விரிவுரை-யாளர் பணியகம் ஒன்றையும் ஏற்படுத்தி நடத்தி வந்தார். அதில் நூற்றுக்கணக்கான வேத மாணவர்கள் தங்களுடைய நேரத்தின் ஒரு பகுதியை வேத பாடங்களை எடுத்துரைக்க பயன்படுத்தினார்கள். நடைமுறையில் வேத மாணவர்களுக்காகவே மாதாந்திர பத்திரிக்-கைகள் எழுதப்பட்டு, வருடத்திற்க்கு அநேக

மில்லியன் கணக்கில் பத்திரிக்கைகள் வெளியாயின.

அவருடைய வாராந்திர பிரசங்க பாடங்கள் செய்தித்தாள்களின் மூலம் கையாளப்பட்டது. 2000க்கும் அதிகமான செய்தித்தாள்கள் ஒருங்கிணைந்து 15 மில்லியன் வாசகர்களுக்கு ஒரே நேரத்தில் அவருடைய பாடங்களை வெளியிட்டன. சொல்லப்பட்டபடி 4000க்கும் அதிகமான செய்தித்தாள்களில் அவருடைய பிரசங்கங்கள் வெளியிடப்பட்டன.

பாஸ்டர் ரசல் அவர்களை அவ்வப்போது விமர்சித்து, எதிர்க்கின்ற "தி கான்டினென்ட்" என்ற வெளியீட்டின் ஆசிரியர் அவரைபற்றி முக்கியத்துவம் வாய்ந்த கருத்து ஒன்றினை வெளியிட்டார்.

பாஸ்டர் ரசல் அவர்களின் பத்திரிக்கைகள் அந்நாட்களில் வாழ்ந்த மிகபெரிய எழுத்தாளர்களின் பத்திரிக்கைகளை காட்டிலும் மிக அதிக அளவில் எல்லா வாரமும் தவறாமல் வெளிவந்து கொண்டிருந்தது. வட அமெரிகாவில் வாழ்ந்த மிகபெரிய பிரசங்கியார்களை காட்டிலும், ஆர்தர் பிரிஸ்பேன், நார்மன் ஹாப்குட், ஜார்ஜ் ஹோரேஸ் லோரிமர், டாக்டர். ஃபிராங்க் கிரேன், ஃப்ரெட்ரிக் ஹஸ்கின்ஸ், இதுபோன்ற அநேக சிறந்த ஆசிரியர்களை காட்டிலும் பாஸ்டர் ரசல் அவர்களின் எழுத்துக்கள் மிக அதிக அளவில் வலம் வந்தன.

# அறுவடை ஊழியங்கள்

பாஸ்டர் ரசல் அவர்கள் வேதத்தில் உள்ள வசனங்களை மிகவும் கவனமாக ஆராய்ந்தார். முன்பே குறிப்பிட்டது போல பாஸ்டர் ரசல் அவர்கள் விசுவாசித்ததும், கற்ப்பித்ததும் போல நாம் நம்முடைய ரட்சகரின் இரண்டாம் பிரசன்னத்தின் நாட்களில் வாழ்ந்து கொன்டிருக்கிறோம். அவருடைய இரண்டாம் பிரசன்னம் 1874ஆம் ஆண்டிலிருந்து கணக்கிடப்பட்டுள்ளது. (காலம் சமீபமாயிருக்-கிறது என்ற புத்தகத்தில் வாசிக்கவும்) அந்த நாட்களின் துவக்கம் முதல் நாம் யுகத்தின் முடிவின் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்-கின்றோம். இந்நாட்களிலே இயேசு கிறிஸ்து அறுவடை வேலையை செய்து கொண்டிருக்-கிறார். எஜமானுடைய வாக்கின்படி, இந்த அறுவடை வேலை என்பது "கோதுமை மணிகள்" என்று அழைக்கப்படுகின்ற உண்மை கிறிஸ்தவர்களையும் "பதர்கள்" என்று அழைக்கபடுகின்ற பெயர்க் கிறிஸ்தவர்களையும் தனியாக பிரித்தெடுத்து, உண்மை கிறிஸ்தவர்களை தேவனுடைய இராஜ்யத்தில் சேர்க்கிறதாயிருக்கிறது.

இதைபற்றி இயேசுவானவர் சொன்ன ஒரு காரியத்தை சற்று கவனிப்போம். (பணிவிடை-காரருக்கு தகுதியான காலத்திலே படி கொடுக்கும்படி எஜமான் அவர்கள்மேல்

அதிகாரியாக வைக்கதக்க உண்மையும் விவேகமுள்ள விசாரனைக்காரன் யாவன்? எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாய் காணப்படுகிற ஊழியக்காரன் பாக்கியவான். தனக்குள்ளதெல்லாவற்றின் மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பான் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். (லூக்கா 12:42-44, மத்தேயு 24:45-47) பாஸ்டர் ரசல் அவர்களின் எழுத்துகளை வாசிக்கின்ற ஆயிரக்கணக்கான வாசகர்கள் விசுவாசிக்கின்ற ஒரு காரியம், "அந்த உண்மையும், விவேகமுமுள்ள ஊழியக்காரன்" இவர்தான் என்றும், அவருடைய பிரதானமான வேலை விசுவாச வீரருக்கு காலத்திற்கு ஏற்ற சத்தியத்தை வழங்குதல்" என்றும் நம்புகின்றார்கள். இத்தகைய நன்மதிப்பை பெற அவருடைய மனத்தாழ்மையே காரணம். அவர் ஊழியத்தைப் பற்றியதான தெளிவான விளக்கம் "தி வாட்ச் டவர் ஆஃப் ஜுன் 1, 1916-ல்" குறிப்பிடப்பட்டுள்ளது.

பாஸ்டர் ரசல் அவர்கள் அவ்வப்போது வெளிநாடுகளுக்கு சுவிசேஷ பயணம் மேற்கொண்டார். 1892 ஆம் ஆண்டு, ஐரோப்பா தேசத்திற்கும், புனித நகரத்திற்கும், இன்னும் பல்வேறு நாடுகளுக்கும் இந்த மகத்தான சத்தியத்தை கொண்டு சென்றார். 1910-ல் மறுபடியும் ரஷ்யா, ஐரோப்பா மற்றும் பாலஸ்தீனத்திற்கு பயணம் செய்து, "யூதர்கள்

தங்களுடைய தேசத்தில் கூட்டிச் சேர்க்கபடுதலைப் பற்றி அங்குள்ள மதப்பற்றுள்ள யூதர்களுக்கு விரிவுரையாற்றினார். அந்த வருடத்தில் அக்டோபர் மாதம் பயணம் முடித்து அமெரிக்கா திரும்பிய பொழுது, நியூயார்க் நகரத்தில் ஹிப்போட்ரோம் என்ற மிகப்பெரிய அரங்கில் அங்குள்ள யூதர்கள் ஒன்றுகூடி அவருக்கு மிகப்பெரிதான வரவேற்பை அளித்தார்கள். அந்த முக்கிய நிகழ்வில் அவர் ஆற்றின உரை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பா தேசம் முழுவதும் எபிரேய நாடுகளில் வெளியிடப்பட்டது. அநேக யூத ஜனங்களால் அவர் மிகவும் நேசிக்கப்பட்டார். 1911 ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஏழு பேரைக் கொண்ட குழு ஒன்றின் தலைவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த குழு, உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, ஜப்பான், கொரியா, சைனா, சிரியா, இந்தியா போன்ற நாடுகளில் உள்ள மிஷனரி ஊழியங்களைக் குறித்து ஆராய்ந்தார்கள். இந்த சுற்றுப்பயணத்தின் அறிக்கையை அறிந்து கொள்ளும் விதமாக மிகபெரிய கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு, 1912ஆம் ஆண்டு வசந்தகாலத்தில் நியூயார்க்கின் ஹிப்போட்ரோம் என்ற அரங்கில் இந்த குழு ஒன்றில் அறிக்கையை கேட்க கூடி வந்திருந்த ஒரு மிகப்பெரிய பொதுக்கூட்டத்தில் பாஸ்டர் ரசல் அவர்கள் செய்த உபதேசம் மிஷனரி வேலைக்கு சம்பந்தப்பட்டவர்களை முற்றிலுமாக கலக்கியது.

அதன் பிறகும் கூட வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை கிரேட் பிரிட்டனுக்கு பயணம் மேற்கொண்டு லண்டனில் உள்ள சபையையும், அவர் போதகராயிருந்த மற்ற சபைகளையும் சந்தித்து, அங்குள்ள ராயல் ஆல்பர்ட் ஹால் மற்றும் அங்குள்ள மிகப்பெரிய அரங்கங்களிலும் கூட்டங்களை நடத்தி பேசினார். இன்னும் அநேக நகரங்களிலும், கிளாஸ்கோவில் உள்ள செயின்ட் ஆண்ட்ரு ஹால் மற்றும் எடின்பர்க் மற்றும் லிவர் பூல் போன்ற இடங்களிலும் மற்றும் வேறே நகரங்களிலும் கூட பேசினார். அவருடைய சொற்பொழிவுகள் எல்லாம் பிரிட்டிஷ் பத்திரிக்கை நிறுவனத்திடமிருந்து நன்மதிப்பு மிக்க கருத்துக்களை பெற்றது. அவர் உரையாற்றின இடங்கள் பொதுவாகவே ஒரு பெரிய அரங்கமாகவும் இக்கூட்டங்களில் பங்குபெறும் மக்கள் அவருடைய பிரசங்கங்களை பதிவு செய்வதற்கு ஏற்றதாகவும் இருந்தது. அப்போது ஏற்பட்ட போரின் விளைவாக கிரேட் பிரிட்டன் பயணங்கள் முடிவுற்று, திரும்பவும் பயணங்கள் மேற்கொள்ள இயலாமற்போயிற்று. அட்லாண்டிக் தொடங்கி பசிபிக் வரைக்கும் கனடா தேசம் முழுவதிலும் அநேக சுவிசேஷ பயணங்களை மேற்கொண்டார். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சுவிசேஷத்தினிமித்தம் இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த அந்நாளில் 31-ம் தேதி அக்டோபர் மாதம் 1916 ஆம் ஆண்டு

எக்ஸ்பிரஸ் இரயில் மூலம் கனெடியன் டெக்ஸாஸ் என்ற இடத்திற்கு அருகாமையில் வந்துகொண்டிருந்த அத்தருணத்திலே அவருடைய அருமையான வாழ்க்கை எதிர்பாராத விதமாக முடிவுக்கு வந்தது. தேவன் அழைத்த அழைப்பிற்கு பாத்திரமாய், இம்மகத்தான வேலையை முடிவு பரியந்தம் நிறைவேற்றி முடிப்பதில் மிகவும் பாரமுள்ள-வராக இருந்தார். அந்த பலவீனத்திலே தன் உயிரை நீத்தார். மரணம் வரைக்கும் தேவன் பேரில் விசுவாசம் வைத்து எப்படி ஒரு விசுவாசமுள்ள வீரனாய் வாழ்ந்தாரோ அதே போலவே மரித்தார்.

பாஸ்டர் ரசல் அவர்கள் 42 வருட கிறிஸ்துவ ஊழியத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பணத்தேவையைப் பற்றி ஒருபோதும் கேட்டது கிடையாது. அவரால் நடத்தபட்ட எந்த ஒரு பொது கூட்டங்களுக்கும் அவருக்காகவோ, அவருடைய ஊழியங்களுக்காகவோ அவருடைய உதவியாளர்களுக்காகவோ எந்த ஒரு காணிக்கையும் எடுக்கபடவில்லை. இது கர்த்தருடைய ஊழியம் மனிதனுடைய ஊழியம் அல்ல, எனவே இந்த ஊழியத்திற்கு தேவையான பணதேவைகளை கர்த்தர் சந்திப்பார் என்ற விசுவாசம் அவருக்குள் இருந்தது.

உண்மையாகவே, உலகம் முழுவதிலுமிருந்து அநேகர் இந்த ஊழியத்திற்கு தானாக முன்வந்து தாராளமாய் பங்களித்தார்கள், இதுவே அவருடைய முடிவு சரியானது தான் என்பதை நிரூபித்தது.

அவர் எதற்காய் தன்னுடைய வாழ்வை அர்பணித்தாரோ, அதற்காகவே தான் சம்பாதித்த எல்லாவற்றையும் ஒப்புகொடுத்தார். அவருடைய தனிபட்ட செலவிற்காக மாதம் 11 டாலர் மாத்திரமே பெற்றுகொண்டார். தனக்கு சொந்தமான எதுவும் அவர் மரிக்கும்போது அவரிடமில்லை. விசேஷமாக வேதத்திலுள்ள அனைத்து சிந்தனை தலைவர்களை போலவும், அவருடைய எஜமானைப் போலவும் வாழ்ந்தார். ஒருசிலரால் தவறாக புரிந்து கொள்ளபட்டதால் தவறாகவே சித்தரிக்கபட்டார்.

அவருடைய மரணத்திற்கு பிறகு அவருடைய சரீரம் நீயூயார்க்கிற்கு கொண்டு செல்லப்பட்டு, அவர் சொற்பொழிவாற்றின சங்கத்திற்கு சொந்தமான ஆலயத்திலே வைக்கப்பட்டது. பல்வேறு நாடுகளிலிருந்து அவரை நேசித்த அநேகரால் காணிக்கையாக அனுப்பட்ட மிகவும் அழகான மலர்களால் அலங்கரிக்கபட்ட மண்டபத்தில் அவருடைய சரீரம் ஆயிரக்கணக்கான மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது. அந்த முழு

ஆலயமும் மிகவும் விலையேறபெற்ற அழகான மலர்களால் அலங்கரிக்கபட்டிருந்தது. ஒரு மாபெரும் நல்ல மனிதரும், மிகவும் கனத்திற்கும், நேசத்திற்குரியவருமான அவருடைய கடைசி அஞ்சலியில், தங்களுடைய அன்பையும் மரியாதையும் செலுத்தும் நோக்கில் திரளான மக்கள் திரண்டு வந்து அவருடைய நல்லடக்கத்தில் கலந்துக்கொண்டார்கள். அது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்சியாயிருந்தது. அங்கு பேசினவர்கள் அவருடைய வாழ்க்கை மற்றும் கனமான ஊழியத்தை அவர் செய்தது பற்றியும் உணர்ச்சி பூர்வமாக பேசி அவருக்கு அஞ்சலியை செலுத்தினார்கள்.

அதன்பிறகு, அவருடைய சரீரம் அவர் ஆரம்பகாலத்தில் வாழ்ந்த மற்றும் ஊழியம் செய்த ஸ்தலமான நார்த் பிட்ஸ்பர்க் - கிற்கு கொண்டுவரப்பட்டு அங்கு மீண்டும் மிகபெரிய அளவில் கார்னெகி ஹாலில் அவருடைய நல்லடக்க ஆராதனை செய்யப்பட்டது. யுனைடெட் கல்லறையில் உள்ள பெத்தேல் நிலத்தில் அவருடைய சரீரம் ஒரு பெட்டகத்திற்குள் வைக்கப்பட்டு புதைக்கபட்டது.

கல்லறைக்கு செல்லும் வழிகளெல்லாம் மலர்களால் அலங்காரம் செய்யபட்டிருந்தது.

அவருடைய காலத்தில் எல்லோரை காட்டிலும் குறிப்பிடத்தக்க மிகவும் நேசிக்கபட்டவராக விளங்கின ஒரு மிகசிறந்த மாமனிதரின் ஊழியத்தின் வாழ்க்கை இப்படியாக முடிவுக்கு வந்தது. அவரை நன்றாய் அறிந்தவர்களால் அவர் மிகவும் நேசிக்கப்பட்டவராய் விளங்கினார்.

"தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து
உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து,
அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச்
சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப்
பின்பற்றுங்கள்." எபிரெயர் 13:7

For more information
Please Contact: